**யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பதினைந்து கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்ம் - 2023**

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பதினைந்து கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2023 ஆம் ஆண்டிற்கான யாழ்ப்பாண மாவட்டத்தின் 15 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த 15 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களுக்கும் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டதுடன், அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்
### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 08 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களில் மீளாய்வாண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்காத 88.27 தொன் மானிய உர இருப்புக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | மானிய உர இருப்புக்களையும் நிதி கூற்றுகளில் இருப்பாக காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்புக்களை நிதிக்கூற்றுக்களில் காட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 02 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டிற்கான மூலதனச்செலவினங்கள் ரூபா 5,360,915 நிலையான சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிரந்தர சொத்துக்களின் பதிவேட்டில் உள்வாங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | 03 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டில் பௌதீகரீதியில் காணப்பட்டிருக்காத நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 1,519,131 நிதிக்கூற்றுக்களில் மிகைப்படுத்தி காட்டப்பட்டிருந்தது. | பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | சொத்துக்களின் சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 04 கமநல சேவை நிறைவேற்றுக்குழுக்களின் பௌதீகரீதியில் காணப்பட்டிருக்காத ரூபா 1,299,442 பெறுமதியான நடைமுறை சொத்துக்கள் நிதிக்கூற்றில் மிகைப்படுத்தி காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | 15 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டிற்கான ஏக்கர் வரி வருமதிகள் ரூபா 1,071,189 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஏக்கர் வரி வருமதியை சரியாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். |
| (ஊ) | புலோலி கமநல சேவை நிறைவேற்றுக் குழுவின் பசளை விற்பனை நட்டம் ரூபா 251,019 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பசளை விற்பனை நட்டம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (எ) | புலோலி கமநல சேவை நிறைவேற்றுக் குழுவின் முன்னைய ஆண்டு திரண்ட நிதி இறுதி மீதி ரூபா 3,905,028 மீளாய்வாண்டில் ரூபா 6,238,013 ஆரம்ப மீதியாக முன்கொண்டு வரப்பட்டிருந்தமையால் வேறுபாடு ரூபா 2,732,984 அவதானிக்கப்பட்டிருந்தது. | சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | திரண்ட நிதியின் சரியான மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். |

**1.3.2 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை.**

| | கணக்காய்வு அவதானிப்பு | | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | **விடயம்** | **தொகை ரூபா** | **வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள்** | | |
| (அ) | 09 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டுக்கான எரிபொருள் செலவு, சாரதி தரகுப்பணம் மற்றும் திருத்தச் செலவு. | 2,837,546 | நாளாந்த வாகன ஓட்டப் பதிவேடு, வாகன சம்பவத்திரட்டு புத்தகம், எரிபொருள் நுகர்வு பதிவேடு, வாகனத் திருத்த பதிவேடு | குறித்த பதிவேடுகள் உரிய முறையில் பேணப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இற்றைப்படுத்தப் பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 14 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டிற்கான ஏக்கர் வரி | 1,048,545 | வயற்காணி பதிவேடுகள் | வயற்காணி பதிவேடானது இற்றைபடுத்தப்பட்டு கணக்காய்வு நடவடிக்கைக்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | வயற்காணிப் பதிவேடுகள் உரிய முறையில் பேணப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 13 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 53 வருமதிகள் | 7,547,460 | விரிவான பட்டியல் மற்றும் உறுதிப்படுத்தல் கடிதம் | வருமதி தொடர்பான எழுத்து மூலமான உறுப்படுத்தல் கடிதங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விரிவான பட்டியல் மற்றும் உறுதிப்படுத்தல் கடிதம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 15 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 55 சென்மதிகள் | 30,670,325 | விரிவான பட்டியல் மற்றும் உறுதிப்படுத்தல் கடிதம் | சென்மதிகளுக்கான எழுத்து மூலமான உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ள நடவடிக்கை | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | எடுக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | 03 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 04 நிலையான வைப்பு மீதிகள் | 6,267,610 | வங்கி உறுதிப்படுத்தல் கடிதம் | வங்கி உறுதிப்படுத்தல் கடிதம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கி உறுதிப்படுத்தல் கடிதம் பெறப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | புலோலி கமநல சேவை நிறைவேற்றுக்குழுவின் நிலையான சொத்துகக்கள் | 635,616 | நிலையான சொத்துதுப் பதிவேடு | சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | நிலையான சொத்துதுப் பதிவேடு உரிய முறையில் பேணப்படுதல் வேண்டும் |

### 1.3.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| உடுவில் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவின் சென்மதிகளின் மீதி நிதிக் கூற்றுக்களின்பிரகாரம் பெறுமதி ரூபா 1,158,926 ஆக இருந்தபோதிலும், துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 532,624 ஆக காணப்பட்டிருந்தமையினால் ரூபா 626,302 வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | இனிவரும் காலங்களில் இத்தவறு நிகழாமல் சென்மதிகள் சரியான பெறுமதியே நிதிநிலமைகூற்றில் காட்டப்படும் | சென்மதிகளின் சரியான பெறுமதி நிதிக்கூற்றில் காட்டப்படுதல் வேண்டும். |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) **2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்** | | | |
| (i) பிரிவு 53 | 14 கமநல சேவை நிறைவேற்று குழுக்களினால் கமத்தொழிற் காணிகளின் பதிவேடுகள் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | கமத்தொழில் காணிப் பதிவேட்டுக்கான வேலைகள் நிறைவடைந்ததும் இப்பதிவேடானது பேணப்படும். | சட்டத்தின் விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) பிரிவு 55 | 13 கமநல சேவை நிறைவேற்று குழுக்களின் நிர்வாகப் பிரதேசத்திலுள்ள கமத்தொழிற் | தற்போது google map இன் உதவியுடன் அளவீடு செய்யப்பட்டு | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | காணிகளை நில அளவை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | வயற்காணிகள் அளவுகள் பெறப்பட்டுள்ளன. | |
| (iii) பிரிவு 56(i) | 06 கமநல சேவை நிறைவேற்று குழுக்களினால் ஏக்கர்வரிப் பதிவேடானது பேணப்பட்டிருக்கவில்லை. | ஏக்கர் வரிப்பதிவேடானது இனிவரும் காலங்களில் முறையாகப் பேணப்படும். | - மேற்படி - |
| (ஆ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள்** | | | |
| (i) நிதி ஒழுங்கு விதி 110(1)(2) | 10 கமநல சேவை நிறைவேற்று குழுக்களினால் இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடுகள் உரிய முறையில் இற்றைப்படுத்தி பேணுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டும். | நிதி ஒழுங்கு விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) நிதி ஒழுங்கு விதி 880, 881 | 08 நிறைவேற்று குழுக்களின் 20 உத்தியோகத்தர்கள் பிணைப்பணம் ரூபா 95,000 வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | 08 நிறைவேற்று குழுக்களிலும் பிணைப்பணப் பதிவேட்டை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (iii)நிதி ஒழுங்கு விதி 1646 | 14 நிறைவேற்று குழுக்களினால் 109 எண்ணிக்கையான உழவு இயந்திரங்களுக்கான நாளாந்த வாகன ஓட்டப் பதிவேட்டு மூலப்பிரதி மற்றும் அதன் மாதாந்த செயலாற்றுகைப் பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | நாளாந்த ஓட்டப் பதிவேட்டின் மூலப்பிரதி மற்றும் அதன் மாதாந்த செயலாற்றுகைப் பொழிப்புக்கள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 2022.06.01 ஆந் திகதிய 7/5/12/11 ஆம் இலக்க கடிதம் | 14 கமநல சேவை நிறைவேற்றுகுழுக்களினால் மாவட்டத்திற்கு பொறுப்பான உதவி ஆணையாளர், கமநல சேவைகள் நிர்வாகக் குழுக்களுக்கு இடையில் உள்ள கொடுக்கல் வாங்கல்களின் வருமதி, சென்மதி நிலுவைகளை 2022.07.28 மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் கமநல சேவை நிலையத்திற்குமான இடையிலான கொடுக்கல்வாங்கல் களை 2022.08.25 ஆந் திகதிகளுக்கு முன்னர் தீர்த்து வைக்கப்பட வேண்டுமெனக் | நிலுவைகளை தீர்த்து வைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 26,138,191 தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை | 14 கமநல சேவை நிறைவேற்றுகுழுக்களுக்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வு தொடர்பான பரீட்சிப்பு மேற்கொள்ளுவதற்கு ஆவண செய்யப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான 15 நிறைவேற்றுக் குழுக்களின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 21,988,046 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 22,404,329 தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதிப்பெறுபேறுகளில் ரூபா 416,283 இற்கான குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உரும்பிராய் கமநலசேவை நிறைவேற்றுக் குழுவின் கூட்டுமொத்தம் ரூபா 191,564 இழப்பினை 28 ஆண்டுகளாக ஏடுகளில் இருந்து பதிவழித்து சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 1995 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இவ் இழப்பினை நிதி பிரமானத்திற்கு அமைய முறையாக பதிவழித்து சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இழப்பினை ஏடுகளில் இருந்து பதிவழித்து சீர்செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 13 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களில் 1510 எண்ணிக்கையான சொத்துக்களை பதிவழிப்பதற்கோ, திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை பதிவழிப்பதற்கும் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு அல்லது முறையாக பதிவழிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | சாவகச்சேரி கமநலசேவை நிறைவேற்றுக் குழுவில் 2022 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு விற்பனைசெய்வதற்காக பெறப்பட்ட ரூபா 7,008,503 பெறுமதியான உரங்கள் விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாது பொது ஒதுக்கமாக மீளாய்வாண்டு இறுதி வரை களஞ்சியசாலையில் காணப்பட்டிருந்தது. | விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வினைத்திறனான நிதி முகாமைத்துவத்தினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | கீரிமலை கமநலசேவை நிறைவேற்றுக் குழுவில் 1985 திசெம்பர் 14 இல் களவாடப்பட்டிருந்த ரூபா 113,576 உழவியந்திரத்தினை சீர்செய்ய கடந்த 38 வருடங்களாக நடவடிக்கை | சீராக்க நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | முறையான அனுமதியின்கீழ் இழப்பினை ஏடுகளில் இருந்து பதிவழிக்க நடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்படாமல் நிதி நிலைமைக்கூற்றில் சொத்தாக காட்டப்பட்டுவருகின்றது. | | அல்லது வேறு பொருத்தமான முறையில் கணக்கினை சீர்செய்தல் வேண்டும். |
| (எ) | நல்லூர் கமநலசேவை நிறைவேற்றுக் குழுவின் கணக்கறிக்கைகளில் காட்டப்பட்டிருந்த சரக்கிருப்பு நட்டம் ரூபா 464,881 தொடர்பில் 28 ஆண்டுகளாக சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இழப்பு பதிவேடு பராமரித்தல் மற்றும் இழப்பினை ஏடுகளில் இருந்து பதிவழித்தல் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுச் செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 04 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களில் மீளாய்வாண்டின் காலாவதியான ரூபா 328,949 பெறுமதியான 298 எண்ணிக்கையான பொருட்கள் உரிய நடவடிக்கை எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டிருந்தன. | காலாவதியான பொருட்களை பதிவழிக்க இனிவரும் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்காலத்தில் இதுபோன்ற இழப்புகள் ஏற்படாமல் தடுப்பதற்கான வழிமுறைகளை வகுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நல்லூர் கமநலசேவை நிறைவேற்றுக் குழுவின் கமக்கார அமைப்புக்களினது விவசாயிகளின் பிள்ளைகளின் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு பரிசுப் பொருட்கள் மற்றும் வெகுமதிகளை வழங்குவதற்காக நிலையான வைப்பு வட்டி மூலம் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 2,357,366 ஐந்து வருடங்களாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டிராது நிலையான வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்தது. | இவ்வருடத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியினை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | கைதடி கமநலசேவை நிறைவேற்றுக் குழுவினால் 2579.5 லீற்றர் ECO vita உரமானது குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. | சீராக்க நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | உரங்களை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 விளைவற்ற சொத்துக்கள் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 12 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களில் காணப்படும் நான்கு சில்லு உழவியந்திரங்களில் 57 எண்ணிக்கையான உழவியந்திரங்கள் மற்றும் 06 உழவு இயந்திரப்பெட்டிகள் 02 வருடங்கள் தொடக்கம் 13 வருடங்கள் வரை உரிய | குறித்த உழவு இயந்திரங்கள் மற்றும் உழவு இயந்திரப் பெட்டிகளை திருத்தம் செய்து பாவனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதோடு பதிவழிக்கவும் நடவடிக்கை | உழவியந்திரங்கள் மற்றும் உழவியந்திரப் பெட்டிகளை பயன்படுத்தல் தொடர்பில் உரிய |

| | | | |
|---|---|---|---|
| | பராமரிப்புக்கள் அற்ற நிலையில் பழுதடைந்து காணப்படுவதுடன் திருத்தம் செய்து உபயோகிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 04 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களுக்கு 2019 ஆம் ஆண்டில் ரூபா 864,154 பெறுமதியான 04 மண் பரிசோதனைக்கருவிகள் வழங்கப்பட்டு ரூபா 32,000 செலவில் குறித்த பரிசோதனைகள் தொடர்பாக பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த கருவிகள் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | இக் கருவிகளை பயன்படுத்தி மண்ணின் PH, EC ஆகியவற்றை மட்டுமே அறியமுடியும். ஆனால் மண்ணின் பசளை அளவை அளவிட முடியாது இருப்பதனாலும் இக் கருவிக்குரிய இரசாயனங்களை பெற்றுக்கொள்ள முடியாது உள்ளதாலும் இது நாள்வரை இக் கருவியானது பயன்படுத்தப் படாமல் உள்ளது. | மண்பரிசோதனை கருவிகள் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 ஏனைய தரப்பினர்களுக்குரித்தான வளங்களைப் பயன்படுத்துதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2011 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 96 எண்ணிக்கையான நான்கு சில்லு உழவியந்திரங்கள் கடந்த 12 வருடங்களாக உரிமைமாற்றம் செய்யப்பட்டிருக்காது 13 கமநலசேவை நிறைவேற்றுக்குழுக்களினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | உழவியந்திரங்களினை எமது திணைக்களத்தின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உழவு இயந்திரங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 10 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களுக்களிற்கு அரச காணியில் ரூபா 56,871,773 பெறுமதியான கட்டடங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்ற போதும் அவ் அரச காணியினை உரித்தாக்குவதற்கு கடந்த 32 வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த அரச காணியை நிலையங்கள் தங்களுக்கு உரித்தாக்குவதற்கான ஆரம்ப கட்டவேலையை தொடங்கியுள்ளனர். | காணிகளினை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 06 பதவி நிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 348 ஆக காணப்பட்டிருந்தபோதிலும் உள்ளபடியான பதவியணியினர் 162 ஆக காணப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் 201 வெற்றிடங்களை நிரப்புவதற்கோ 15 மிகையாளணியினர் தொடர்பில் 15 நிறைவேற்றுக்குழுக்களினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் கமநல சேவை அதிகார எல்லைக்கு உட்பட்ட நிலையங்களிலுள்ள மிகையாளணியினர் சேவை நீலையங்களின் வகிபங்கின் அடிப்படையில் இடமாற்றம் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. | தேவையானவாறு வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மேலதிக பதவியணியினரை வேறு அலுவலகங்களுக்கு மாற்றுவகற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்திற்கமைவாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களினை அடைவதற்கு 15 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களினால் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள், அவ்இலக்குகளை அடைந்து கொள்வதற்காக செயற்படுத்தப்பட வேண்டியவைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்களை அளந்து கொள்வதற்கான குறிகாட்டிகள் என்பன 05 ஆண்டுகளாக அடையாளம் காணப்பட்டுச் செயற்படுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளினை அடைந்து கொள்ளும் பொருட்டு உரிய நடவடிக்கைகள் இனிவரும்காலங்களில் எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 5. கமநல வங்கி

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 14 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களினால் 2009 முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கடன்களில் 248 விவசாயிகளிடமிருந்து கடன் நிலுவை ரூபா 17,083,182 அறவீடு செய்ய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 14 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களின் இருப்புக்கள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இனி வரும் காலங்களில் இருப்புகளின் உள்ளக கட்டுப்பாடு உரிய முறையில் பேணப்படும். | இருப்புகளின் உள்ளக கட்டுப்பாடு உரிய முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |